முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கூர்மானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

18.03.2019, திங்கட்கிழமை

1. **ஆறுமுக ஞானியே அரங்கா**
**அகிலம் காக்கும் அறம் வழி**
**மாறுதலை செய்து வரும் தேசிகா**
**மண்ணுலகில் உன் பெருமை கூறி**

2. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
குறையிலா **விளம்பி சேல் திங்கள்**
**தெரியவே சதுர்திகதி சோம வாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 4ம் நாள் 18.03.2019, திங்கட்கிழமை)**
**தேசிகனுக்கு கூர்மானந்தர் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்க மகானின்
தானதரும உயர் நெறியே
தரணியில் நீர்நில வளம் பெருக்கி வர

4. வருகவே வரும் காலங்களிலும்
வளமான இயற்கை பலமும்
தருமமும் பசுமை பாதுகாப்பும்
தரணியிலே முழுமை காண

5. காணவே ஆசானாக அரங்கனை
கலியுகத்தார் ஏற்று வருக
ஞான உபதேசங்களை ஏற்று
ஞானமார்க்கமாம் சன்மார்க்க வழியை

6. வழியை பின்பற்றி வர
வழுவாது சித்தர்களின் மேலான
அழியாமை பெறும் பூசைமுறை
அறத்தையும் விடாது தொடர

7. தொடர கலிகால மக்களுக்கு
தொல்லை தரும் இயற்கை சீற்றம்
இடரான பேரிடர்கள் அணுகிடாத
எக்காலமும் பாதுகாப்பும் பெருகி

8. பெருகியே உண்மைபட மக்களும்
பேதமிலா பெருஞ் சமூகமும் மாறி
ஆறுமுகன் அருளாசி படவே
அகில மாற்றம் நடந்தேறும்

9. தேறவே தெய்வ பலம் கொண்ட
தெரிவை எனும் மகா சக்திகளே
கூறவே பொறி புலன் அடங்க
குமரன் ஆறுமுகன் வழிபாடு செய்து

10. செய்து சைவநெறி ஏற்று
சித்தர்களை அழியாமை கொண்ட
மெய்ஞானிகளை வணங்கி வர
மண்ணுலகில் களங்கம் அவபேரு

11. அவபேரு பிறவழி துன்பமதும்
அணுகா பெரும் பாதுகாப்புடன்
புவனமதில் மகா சக்திகளுமாக
பெருமைபட வாழ்ந்து சிறப்பெய்துவர் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கூர்மானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

முருகப்பெருமானின் அவதாரமே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலகம் காக்கும் தர்மத்தின் மூலமாக உலக மாற்றத்தை செய்து வருகின்ற ஞானதேசிகனே இவ்வுலகில் உமது பெருமைகளை கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 4ம் நாள் 18.03.2019, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கூர்மானந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கூர்மானந்தர்.

உயர்வுமிக்க தானதரும நெறியே இவ்வுலகினில் நீர்வளத்தினை பெருக்கி வருகின்றதப்பா. ஆதலினால் உலகினில் தர்மம் பெருக பெருக, வரும்காலங்களில் இயற்கை வளம் பெருகி, பசுமையும் பெருகி, உலகினில் தருமமும் பெருகிடும். முழுமையான பாதுகாப்பை பெற, ஆறுமுக அரங்கனை ஞானகுருவாக கலியுகத்தோர் ஏற்று வருவதுடன், ஆசான் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் ஞானோபதேசங்களை ஏற்று கடைப்பிடித்து வர, ஞானமார்க்கமாம் அரங்கன் உபதேசிக்கும் சன்மார்க்க வழியினை கடைப்பிடித்து வருவதுடன் அழிவிலாமை தந்தருளும் ஞானிகள், சித்தர்கள் ஞானபூஜைகளை செய்தும் தானதருமங்களை தொடர்ந்து செய்து வர வேண்டும்.

இவ்விதமே மக்களெல்லாம் தூயநெறியில் செல்ல செல்ல, கலியுகத்தினில் வாழ்கின்ற மக்களுக்கு துன்பம் தருகின்றதும் பேரிடர்களை தருகின்றதுமான இயற்கை சீற்றங்களும், இயற்கை பேரிடர்களும் அணுகாமல் எக்காலத்தும் முருகப்பெருமானின் அருளால் இவ்வுலகம் காக்கப்படும்.

மக்களிடையே உள்ள பேதாபேதங்கள் எல்லாம் மறைந்து ஒற்றுமையான ஒரே சமுதாயமாக உலக மக்களெல்லாம் மாற்றமடைந்து மக்களெல்லாம் உண்மையுடன் நடந்து முருகப்பெருமானின் அருளாசியுடன் உலகமாற்றம் நடந்திடும்.

உலகினில் தெய்வபலம் கொண்டவர்களும், தெரிவை என்கிற மகா சக்தி ரூபமான பெண்கள் எல்லாம் பொறிபுலன்களை அடக்கி முருகப்பெருமானை உளமார மனம் உருகி பூஜைகளை செய்து உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு சித்தர்களை முற்றுப்பெற்ற ஞானிகளை வணங்கி வர வேண்டும். இவ்விதம் செயல்பட்டு வரவர, அவர்களுக்கு இந்த மாயை சூழ் கலியுகத்திலும் அவப்பேரு நேராமல் களங்கம் உண்டாகாமல் பிற வழிகளிலும், துன்பம் ஏதும் வாராமல் பெரும் அருள் பாதுகாப்புடன் மகா சக்திகளாக பெருமையுடன் இவ்வுலகினில் பெண்கள் போற்றப்பட்டு அற்புதமான வாழ்வினை வாழ்ந்து பலவிதமான சிறப்புகளை பெறுவார்கள் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கூர்மானந்தர்.

–சுபம்–